# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 129 | வியாழக்கிழமை Thursday | 06.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## தமிழக பொது பட்ஜெட்:

# எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு?

## பள்ளி மாணவர்கள் முதல் ‘அண்ணன் சீர்’ திட்டம் வரை விவரங்கள் வெளியீடு

தமிழக பொது பட்ஜெட்டில் எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு? செய்யப்பட்டு உள்ளது என்ற விவரங்கள் வெளியாகி உள்ளன.

தமிழக சட்டசபையில், 2026-27 நிதி ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் இன்று தாக்கல் செய்து பேசினார். இதில், திட்டங்கள் சார்ந்த நிதி ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளன.

இதன்படி, தற்போது நாடு முழுவதும் எதிர்கொண்டு வரும் சூப்பர் எல்-நினோ பாதிப்புகளை தமிழகத்தில் சமாளிக்க ஏதுவாக சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாமல்லபுரத்தை சர்வதேச சுற்றுலா தலமாக அரசு மேம்படுத்தும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மாணவர்கள்

ரூ.2 ஆயிரம் கோடி நிதியுடன் வெற்றி மடிக்கணினி திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழக பொது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

பள்ளிகளில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு உலக தர பயிற்சி - ரூ.5 கோடி

பெண்கள், முதியோர்கள்

மண்ணின் மகள் திட்டம் - ரூ.20 கோடி ஒதுக்கீடு

8 கிராம் தங்க நாணயம், அண்ணன் சீர்திட்டம் - ரூ.812 கோடி ஒதுக்கீடு

கருவுற்ற பெண்களுக்கு தாய் கேர் திட்டம் - ரூ.23 கோடி

நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் - ரூ.33 கோடி

12 மாவட்டங்களில் முதியோர் இல்லங்கள் - ரூ.6.6 கோடி

கால்நடைகள்

ரூ.57 கோடிக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம்

தீவனவிதை வங்கிகள் & கிடங்குகள் - ரூ.6.7 கோடி

ரூ.122 கோடிக்கு கால்நடை மருத்துவ சேவைகள்

கால்நடைகள் காப்போம் திட்டம் - ரூ.31 கோடி ஒதுக்கீடு

கால்நடை மருத்துவ சேவைகள் ரூ.122 கோடி

வெற்றி ஆடுகள் வளர்ப்பு திட்டம் - 5 ஆடுகள் வழங்கப்படும்

வெற்றி மகளிர் ஆடு வளர்ப்பு திட்டம் - ரூ.110 கோடி ஒதுக்கீடு

மீன்வளம்

மீனவர் நலன் உதவித்தொகை திட்டம் - ரூ.135 கோடி

மீன்பிடி உதவித்தொகை ரூ.7,000 ஆக உயர்த்தப்படும்

அரசு ஊழியர்கள்

அரசு ஊழியர்களுக்கு புதிய மருத்துவ காப்பீடு திட்டம் - ரூ.838 கோடி

ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளுக்கு - ரூ.47,240 கோடி

ஆன்மிகம்

அடுத்த 5 வருடங்களில் 3000 கோவில்களில் திருப்பணிகள்

ஆன்மிக தலங்களில் ரூ.60 கோடியில் ஓய்வு இல்லங்கள்

மூத்த குடிமக்கள் புனித பயணம் - ரூ.20 கோடி

ஒகேனக்கல் காவிரி, மதுரை வைகை, பாபநாசம் தாமிரபரணியில் நதி சுற்றுலா

மின்சார வாகனங்கள்

பொது இடங்களில் 20 ஆயிரம் மின்சார வாகன (EV) சார்ஜ் நிலையங்கள் - ரூ.50 கோடி ஒதுக்கீடு

குடியிருப்பு பகுதிகளில் மின்சார வாகன (EV) சார்ஜ் மையங்கள் - ரூ.5 கோடி ஒதுக்கீடு

சென்னையில் 20 இடங்களில் திறன்மிகு வாகன நிறுத்தம்

வீடு, குடியிருப்புகள்

அடிப்படை வசதிகளுடன் தரமான குடியிருப்புகள் - ரூ.1,253 கோடி

ரூ.3,108 கோடியில் முதன்மை சுற்றுக்குழாய் திட்டம்

அனைவருக்கும் தரமான வீடு - ரூ.1,253 கோடி நிதி ஒதுக்கீடு

நம்ம சாலை திட்டம் - ரூ.250 கோடி

பொதுவான திட்டங்கள்

அயல்நாட்டு கல்வி உதவி தொகை திட்டம் - ரூ.131 கோடி ஒதுக்கீடு

அயோத்திதாச பண்டிதர் வாழ்விட மேம்பாட்டு திட்டம் - ரூ.300 கோடி

அறிவகம் இந்தியாவின் முதல் ஏ.ஐ.(AI) நகரம் - ரூ.5 கோடி

அனைத்து இ-சேவை மையங்களும் இ-சேவை 2.0 ஆக மேம்படுத்தப்படும்.

ஆன்றோர் மேம்பாட்டு திட்டம் - ரூ.250 கோடி ஒதுக்கீடு

ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் திட்டம் - ரூ.75 கோடி ஒதுக்கீடு

உலகத்தர நீதிமன்ற வளாகம் - ரூ.1,375 கோடி

உணவு மற்றும் கலைத்திருவிழா திட்டம் - ரூ.20 கோடி

ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் - ரூ.2,117 கோடி ஒதுக்கீடு

காமராசர் காலை உணவு திட்டம் - ரூ.710 கோடி ஒதுக்கீடு

சென்னை மின் பகிர்மான திறன் ரூ.1,390 கோடியில் வலுப்படுத்தப்படும்.

திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜி சென்டர் - ரூ.10 கோடி ஒதுக்கீடு

போக்குவரத்து கழகங்களுக்கு ரூ.7,675 கோடி மானியம்

நாட்டுப்புற கலைஞர்கள் வாழ்வாதார பாதுகாப்பு திட்டம் - ரூ.23 கோடி

நெல் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.134 கோடி ஒதுக்கீடு


முதல்-அமைச்சரின் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் - ரூ.2,117 கோடி

வெற்றி வீடு திட்டம் அறிமுகம் ரூ.3,500 கோடி

14,790 நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கம் செய்யப்படும்.

3 புதிய மெட்ரோ வழித்தடங்களுக்கு மாநில அரசு பரிந்துரை

2026-2027 ஆண்டுக்கான மொத்த பட்ஜெட் - ரூ.3,50,027 கோடி ஆகவும், திருத்தப்பட்ட பட்ஜெட்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.2,26,740 கோடியாகவும் உள்ளது




## செப்.8 வரை பட்ஜெட் கூட்டத்தொடர் சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர் அறிவிப்பு





தவெக அரசின் முதல் பட்ஜெட் தாக்கல் செய்தபின் சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

2026-27 நிதிநிலை அறிக்கை மிக அமைதியாக நடந்தது. ஒத்துழைப்பு தந்த உறுப்பினர்களுக்கு நன்றி.

வேளாண் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். செப் 8 வரை பட்ஜெட் கூட்டத்தொடரை நடத்த அலுவல் ஆய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 7-ல் இரங்கற் குறிப்புகள், இரங்கல் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு பொது விவாதம் தொடங்கும். ஆகஸ்ட் 10,11-ல் நிதிநிலை அறிக்கை, வேளாண் அறிக்கை மீது பொது விவாதம் நடத்தப்படும். ஆகஸ்ட் 12- தேதி பொது விவாதத்துக்கு பதிலுரை அளிக்கப்படும். ஆகஸ்ட் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை பேரவை விடுமுறை. ஆகஸ்ட் 17-ம் தேதி முதல் மானிய கோரிக்கை, சட்டமன்றம் காலை 9.30 மணிக்கு தொடங்கும். தேவைப்பட்டால் மாலை 6 மணி வரை சட்டசபை கூட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## “தவெக அரசின் பட்ஜெட்டில் ‘பெயர் மாற்றம்’ மட்டுமே உள்ளது” எதிர்கட்சி தலைவர் உதயநிதி விமர்சனம்



சென்னை:

"100 நாளில் தவெக அரசின் மதிப்பெண் என்ன என்று யாரிடம் கேட்டாலும் பெரிய பூஜ்ஜியம் என சொல்வார்கள். அதேபோல் தான் இன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டும் பூஜ்ஜியம் மதிப்பெண்ணை பெற்றுள்ளது. ஆட்சிக்கு வரும்போது மாற்றம் என்றார்கள். என்ன மாற்றம் என்றால் 'பெயர் மாற்றம்' தான்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, "கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டியுள்ளார்கள். ஆட்சிக்கு வரும்போது மாற்றம் என்றார்கள். என்ன மாற்றம் என்றால் 'பெயர் மாற்றம்' தான். அனைத்து திட்டத்தின் பெயரையும் மாற்றியுள்ளார்கள். கலைஞர் மகளிர் உரிமை தொகையை உயர்த்தி தருவதாக சொன்னார்கள்.

ஆனால் அதைப் பற்றி அவர்கள் வாயே திறக்கவில்லை.

ஒவ்வொரு துறையை பற்றியும் நிதியமைச்சர் மரிய வில்சன் பேசும்போது இந்தியாவிலேயே தமிழகம் முன்னணி மாநிலமாக இருக்கிறது என்று கூறினார். ஒரு வழியாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை எல்லாம் இப்போதாவது ஒப்புக்கொண்டுள்ளார்களே. அதற்கு நிதியமைச்சர் மற்றும் முதல்வருக்கு நன்றி.

மக்கள் பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத் தொடர் முழுவதும் திமுக கேள்வி எழுப்பிக்கொண்டே இருக்கும். எங்களின் கேள்விகளுக்கெல்லாம் தவெக அரசு பதில் சொல்லத் தயாராக இருக்க வேண்டும்.

'அன்பு சோலை' என நாங்கள் கொண்டு வந்த திட்டத்துக்கு 'முதியோர் பொழுதுபோக்கு மையங்கள்' என்றும் 'உலகம் உங்கள் கையில்' என்ற லேப்டாப் திட்டத்துக்கு 'வெற்றி மடிக்கணினி திட்டம்' என்றும் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்துக்கு 'வெற்றி வீடு திட்டம்' என்றும் 'முதல்வர் படிப்பகங்கள்' திட்டத்துக்கு 'டிஜிட்டல் நூலகம்' என்றும் 'நன்னிலம்' திட்டத்துக்கு 'மண்ணின் மகள் திட்டம்' என்றும் பெயரை மாற்றியிருக்கிறார்கள்.

காவிரியில் தண்ணீர் வரவில்லை. ஆடி 18-ல் கூட தமிழ்நாட்டு ஆறுகளில் தண்ணீர் வராத ஒரு நிலையைதான் தவெக அரசு உருவாக்கியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இந்த ஜூலையில் காவிரி நீர் வரத்து குறைந்து காணப்படுவதாக, நாளிதழ் ஒன்றில் கட்டுரை வெளியாகியுள்ளது.

இந்த ஆட்சி அமைந்ததில் அதிகம்' பாதிக்கப்பட்டுள்ளது விவசாயிகள் தான். தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்த பிரச்சினைகளை நான் பேசினேன், அதற்காக என்னை வீடு புகுந்து கைது செய்தார்கள். விவசாய பிரச்சினைகளை மடைமாற்றவே இந்த கைது நடவடிக்கை நடந்தது.

மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடகாவை தடுக்க வக்கில்லாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. தவெக ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. கடந்த 5 வாரங்களில் 4 காவல் மரணங்கள் நடந்துள்ளன. 5 சாதி ஆணவக் கொலைகள் நடந்துள்ளன.

தமிழகத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பினால், முதல்வர் பதிலளிக்க மாட்டார்; முதல்வருக்கு பதில் பொதுப் பணித்துறை அமைச்சர் தான் பதில் சொல்வார் என முதல்வருக்கு முன் ஜாமீன் வாங்குகிறார். இதுபோன்ற நகைச்சுவையை இந்திய ஜனநாயகம், எந்த சட்டமன்றத்திலும் பார்த்திருக்காது.

மக்களுக்கான திட்டங்கள் - வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு என முக்கிய அம்சங்கள் ஏதுமின்றி, திருத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறது தவெக அரசு என்று அவர் தெரிவித்துள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# உலக தாய்ப்பால் வார விழா: ராணிப்பேட்டையில் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், (05.08.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் உலகதாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

உலக தாய்ப்பால் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இப்பேரணியின் மூலம் தாய்ப்பாலின் முக்கியத்துவம், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் அதன் பங்கு மற்றும் தாய்மார்கள் முதல் ஆறு மாதங்கள் முழுமையாக தாய்ப்பால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி சுமதி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பாலசரஸ்வதி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சித்தாமூர் அருகே ஈசூர் கிராமத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம் ஈசூர் ஊராட்சியில ஊராட்சி மன்ற தலைவர் ரவி தலைமையில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இதில் கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் மேலும் ஊராட்சி மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் செய்ய வேண்டும்என புதியதீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டதுஇதில்ஊராட்சி செயலர் பெருமாள் மட்டும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு தீர்மானத்தை வரவேற்கும் விதமாக தீர்மான பதிவேட்டில் கையெழுத்திட்டு சென்றனர்.



## கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள

# ஹிந்துஸ்தான் கல்லூரியில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டது

மாநில கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை மற்றும் கொங்குநாடு அறக்கட்டளையின் சார்பாக சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி பரிசளிக்கும் பத்தாம் ஆண்டு விழா, நிகழ்ச்சி கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கல்லூரியில் நடைபெற்றது இதில், மாநில கொங்கு வேளாலர் கவுண்டர்கள் அறக்கட்டளை தலைவர் கொங்கு தேவராஜ் தலைமை தாங்கினார்.வழக்கறிஞர் எஸ்.பி ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். முனைவர் குமாரசாமி முன்னிலை வகித்தார். சிரவை ஆதீனம் குருமகா சன்னிதானம் தவத்திரு முனைவர் குருபர சுவாமிகள் மற்றும் சமத்துவ ஆன்மீகச் செம்மல் அப்பர் அப்பரடிப்பொடி சொக்கலிங்கனார் நகைச்சுவை பட்டிமன்ற பேச்சாளர் புலவர் ராமலிங்கம், நல்லறம் அறக்கட்டளையின் தலைவர் எஸ்பி அன்பரசன், இந்துஸ்தான் கல்வி குழுமம் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், விவேகம் உயர்நிலைப் பள்ளியின் தாளாளர் ஆர் சுப்பிரமணியம், பிரகதி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜி பாலசுப்பிரமணியம்,ஆகியோர் குழந்தைகள் மத்தியில் சிறப்பு உரையாற்றினர் அதனை தொடர்ந்து, சுமார் 750 குழந்தைகளுக்கு மேல் பரிசுகளும், கோவையில் சிறந்து விளங்குகின்ற கல்லூரி மருத்துவமனை மற்றும் பள்ளி நிர்வாகிகளுக்கு சாதனையாளர் விருதும், சரஸ்வதி கண்ணையனுக்கு கலைவாணி தாய் விருதும், விவேகம் உயர்நிலைப் பள்ளி சுப்பிரமணியனுக்கு கல்வி நெறி காவலர் விருதும், பிரகதி மருத்துவமனையினுடைய நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜி பாலசுப்பிரமணியம் மனித நேயம் மாமனி விருதுகள் வழங்கப்பட்டது தொடர்ந்து, 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி செயலாளர் இன் போஸில் பிரபு, மாவட்ட இளைஞரணி செயலாளர் சித்தாபுதூர் செந்தில், மாணவர் அணி செயலாளர் மதன், மற்றும் கார்த்தி ஹரி மகளிரணியினர் கௌரி செல்வி வடிவு இந்திராணி கவுசிகா தேவி மற்றும் கொங்கு பேரவையினுடைய நிர்வாகிகள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் ஊராட்சியில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு; விவசாயிகள் மகிழ்ச்சி



கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்துள்ள நல்லூர் ஊராட்சியில் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசின் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் பட்டியல் எழுத்தர் தீனதயாளன் தலைமையில் திறக்கப்பட்டது. இந்த திறப்பு விழா நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எருமனூர் எஸ். விஜய், நல்லூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வமணி ஆகியோர் விவசாயிகளுடன் இணைந்து பங்கேற்றனர்.

இந்நிலையம் மூலம் நல்லூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் நெல்லை நேரடியாக அரசிடம் விற்பனை செய்து, விரைவாக அரசு நிர்ணயித்த ஆதரவு விலையைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சி நிலவுகிறது.

முன்னதாக, நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கத் தேவையான அனுமதிகளை வழங்கி, நடவடிக்கைகளை விரைவுபடுத்திச் செயல்பாட்டிற்கு கொண்டுவர உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் புஸ்ஸி ஆனந்த், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்குமார் ஆகியோருக்கு விழாவில் பங்கேற்ற விவசாயிகள் மற்றும் நிர்வாகிகள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

# தென்காசி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையம் எதிர்ப்புறம் உள்ள அசெம்பிளி லாட்ஜ் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கைமதன்தலைமையில் நடைபெற்றது தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஷ-முனா,தென்காசி வடக்கு மாவட்ட நிதிச் செயலாளர் மணிகண்டன்சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளர் சங்கை வேல்சங்கரன்கோவில் நகர செயலாளர்கார்த்திக் ஆகியோர்முன்னிலைவகித்தனர்மாநில தொழிலாளர் அணி செயலாளர் கலிவருணன் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் தென் தமிழரசு, ஆகியோர் சிறப்பு அழைப்பாளரக கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட் தீர்மாணங்கள்..

ஆகஸ்ட்-20 நெல்லையில் மற்றும் தென்காசி மாவட்டம் நெற்கட்டும் செவல் (ஆதித்தமிழர் பேரவை

மாவீரன் ஒண்டிவீரனார் நினைவுநாளில் கடந்த 2009-ம் ஆண்டு முதல் 2026 வரை அருந்ததியர் உள் இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தியது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட தமிழக அரசை வலியுறுத்தி

அருந்ததியர் சமூகநீதி பாதுகாப்பு பேரணி நடத்த தீர்மானம்

2) வெள்ளை அறிக்கை வெளியிட கால தாமதமானால் தமிழக அரசை ஆளும் தமிழக வெற்றி கழகம் அரசு கண்டித்து போராட்டம் நடத்தப்படும் என பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் லட்சுமணன், ஒன்றிய செயலாளர்கள்

வாசுதேவநல்லூர் ஒன்றியதலைவர்கணேசன், கிளை நிர்வாகிகள் ஏந்தல்பட்டி கணேசன், காமராஜ் நகர் தினேஷ், புளியம்பட்டி கனகராஜ், ஊத்தான்குளம் குமரேசன் மற்றும் விஷால் , காந்தி, விஷ்ணு, கார்த்திக்,

இன்பராஜ், பரத், காமராஜர் நகர் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டணர்.

# குற்றாலம் சாரல் விழாவில் செங்கோட்டை ஏ.ஜி. தொடக்கப்பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சி அசத்தல்



தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற குற்றாலம் சாரல் விழாவையொட்டி, பள்ளிக்கல்வித் துறைசார்பில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் செங்கோட்டைசரகத்தைச் சேர்ந்த செங்கோட்டை ஏ.ஜி. தொடக்கப் பள்ளி மாணவிகள் உற்சாகமான நடனநிகழ்ச்சியை வழங்கி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின்தலைமை ஆசிரியர் சுந்தரி தலைமையில் ஆசிரியர்கள் ஏவாஞ்சலின் ராணி, முப்புடாதி, மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பெற்றோர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மாணவிகளின் கலைத் திறமையை பாராட்டினர். நடன நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை ஆசிரியர்கள் பிரபா, ஸ்டெல்லா பிரியா, ஜெயராணி, அமுதா ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.

நடன நிகழ்ச்சிக்கான அனைத்து பயிற்சிகளையும் ஆசிரியர் பிரான்சிஸ் செய்திருந்தார்

# கோவை மருதமலை பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த பணியாளர்களாக பணியாற்றும் பணியாளர்களின் சம்பளத்தில் இரண்டாயிரம் முதல் மூன்றாயிரம் வரை பிடித்த கல்லூரி நிர்வாகம்



கோவை மருதமலை பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை தொடர்ந்து மாலை நேர ஆர்ப்பாட்டத்தை அறிவித்துள்ளனர் இதன் இரண்டாவது நாள் போராட்டம் நடைபெற்றது இதன் ஒரு பகுதியாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாரதியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்க செயலாளர் ரமேஷ் கூறியதாவது..

வேலூர் மாவட்டம், திருவள்ளூவர் பல்கலைக்கழக ஆய்வகத்தில், கடந்த ஜூலை 24ம் தேதி, பாலியல் சீண்டலுக்கு ஆளான மாணவிக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டும், திருவள்ளூவர் பல்கலைக்கழக உள்ளக விசாரணை குழுவிற்க்கு, தற்போது உள்ள, தலைமையை மாற்றம் செய்ய வேண்டும் எனவும், 2012ம் ஆண்டு முதல் திருவள்ளூவர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அளிக்கப்பட்ட பாலியல் புகார்களை, இன்று வரை மோசடியாக முடித்து வைத்து வரும், தற்போதைய தேர்வு கட்டுப்பாட்டு பொறுப்பு அலுவலர், முனைவர் பாபு ஜனார்த்தனன் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், திருமணமான சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண் கொடுத்த புகாரின், மீதான விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணைக்கு வரவிடாமல் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட புகாரின் மேல்விசாரணையை முழுமையாக செய்யக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின்படி, 2013 ஆம் வருடத்திய பாலியல் சீண்டல் குறித்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இன்று வரை நடவடிக்கைஎடுக்காத திருவள்ளூவர் பல்கலைக்கழக நிர்வாகத்தை கண்டித்து,

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றதாக தெரிவித்தார்.

இந்த பேட்டியின் பொழுது பாரதியார் பல்கலைக்கழக தொழிற்சங்க தலைவர் சாந்தாமணி உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம், பிரஜாபிதா பிரம்ம குமாரிகள் ஈஸ்வரிய விஸ்வ வித்யாலயா பிரம்ம குமாரிகள் ராஜயோக தியான மையம், பீஸ் பேலஸில் "போதைப்பொருள் இல்லாத இந்தியாவை நாம் ஒன்றிணைந்து உருவாக்குவோம்." குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (4.8.2026) அன்று அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.




ஈரோடு மாநகராட்சி, (தமயந்தி பாபு சேட் மண்டபம்) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு இருப்பறையில் நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தலில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெல் நிறுவன பொறியாளர்களால் அலகு ஏற்புச் சோதனை (UNIT ACCEPTENCE TEST) செய்யப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (5.08.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ரமேஷ்கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 22 வது ஈரோடு புத்தகத்திருவிழா நூல் வெளியீட்டு அரங்கில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 50 புதிய நூல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (05.08.2026) வெளியிட்டார்.

## 12வது தேசிய கைத்தறி தினம் ஆகஸ்ட் 7 ந் தேதி கொண்டாடப்படவுள்ளது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



1905 -ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் நாள் அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கைத்தறித் தொழிலை போற்றும் வகையிலும் கைத்தறி நெசவாளர்களின் பங்கினை கௌரவிக்கும் வகையிலும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அவர்களின் பெருமையை போற்றும் விதமாக தேசிய கைத்தறி தினம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. முதலாவதுதேசியகைத்தறி தினம் தமிழ்நாட்டில் 07.08.2015 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. தற்பொழுது 12வது தேசிய கைத்தறி தினமானது 07.08.2026 அன்று ஈரோடு மாவட்ட கைத்தறி துறை சார்பாக கொண்டாடப்படவுள்ளது.

12வது தேசிய கைத்தறி தினத்தை சிறப்பாக கொண்டாடும் வகையில் ஈரோடு மாவட்ட கைத்தறி துறையின் சார்பாக 07.08.2026 மற்றும் 08.08.2026ஆகிய இரண்டு தினங்களில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையானது நடைபெறவுள்ளது. இதில் சென்னிமலை பெட்சீட்,படுக்கைவிரிப்பு, தலையணை உறை, துண்டு, பவானி ஜமக்காளம், காட்டன் சேலை, மென்பட்டு சேலை, திரைசீலை மற்றும் மேட் போன்ற இரகங்களுக்கு தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள 20% தள்ளுபடியுடன் கூடிய விற்பனை நடைபெறவுள்ளது.

ஆடை அணிவகுப்பு காட்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம்

திண்டலில் அமைந்துள்ள வி.இ.டி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆடை வடிவமைப்பு துறையில் தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு ஆடை அணிவகுப்பு காட்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம் 07.08.2026 அன்று நடைபெறவுள்ளது.

நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவமுகாம்

நெசவாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் கைத்தறி துறை,மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையுடன் இணைந்து நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் சென்னிமலை, முகாசிபிடாரியூரில் உள்ள ஸ்ரீ காமாட்சியம்மன் திருமண மஹாலில் 07.08.2026 அன்று நடைபெறவுள்ளது.


மரக்கன்று நடுவிழா

சென்னிமலையில் உள்ள முகாசிபிடாரியூர் மற்றும் மேலப்பாளையம் பகுதியில் 07.08.2026 அன்று மரக்கன்று நடுவிழா நடைபெறவுள்ளது.




ஈரோடு மாவட்டம், தந்தை பெரியார் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை முகப்பு பகுதியிலிருந்து உலக தாய்ப்பால் வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (5.8.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## தமிழக பட்ஜெட் 2026ல் வெற்றி மடிக்கணிணி திட்டம்: கல்வி சார்ந்த அறிவிப்புகள் என்னென்ன?



சென்னை:தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி மற்றும் உயர் கல்வித் துறைக்கு ரூ.8,393 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026–27) பொது பட்ஜெட்டை சட்டப் பேரவையில் இன்று நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். இதில் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறையில் வெளியான அறிவிப்புகள் விவரம்:

> கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணிணி வழங்கும் வெற்றி மடிக்கணிணி திட்டத்துக்கு ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> பொது நூலங்களை டிஜிட்டல் நூலகங்களாக உருவாக்க ரூ.10 கோடி ஒதுக்கப்படும். போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சியளிக்க ரூ.3.38 கோடி கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

> மாணவர் தங்கும் விடுதிக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> 12 லட்சம் கல்லூரி மாணவர்கள். ஒரு லட்சம் இளைஞர்களுக்கு தொழி திறன் பயிற்சி வழங்கப்படும்.

> 11ம் வகுப்பு பயிலும் 5.32 லட்சம் மாணவர்களுக்கு ஹெல்மெட், குடிநீர் பாட்டில்கள் கொண்ட நவீன சைக்கிள் வழங்கும் திட்டத்துக்கு ரூ.277 கோடி நிதி ஒதுக்கப்படும்.

> நீட் தேர்வை ரத்து செய்து பிளஸ் டூ மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

> அரசுப் பள்ளிகளில் சூப்பர் கிளீன், சூப்பர் கேம்பஸ் திட்டம் செயல்படுத்தப்படும்.

> ரூ.90 கோடி நிதியில் 5 தொழிற் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்படும். > பள்ளி பாடத்திட்டத்தை சீரமைக்க ரூ.25 கோடி ஒதுக்கப்படும்.

> மதுரையில் 300 மாணவர்கள் சேர்க்கையுடன் சட்டக் கல்லூரி அமைக்கப்படும்.

> வெற்றி திறன் பயிற்சி திட்டத்துக்கு ரூ.150 நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> அரசுப் பள்ளிகள் நவீனமயமாக்கல் திட்டத்துக்கு ரூ2,132 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். > தமிழ்நாடு சுடர் திட்டத்துக்கு ரூ.3,200 கோடி நிதி ஒதுக்கப்படும்.

> பள்ளி நேரம் முடிந்ததும் விளையாட்டுக்காக ஒரு மணி நேரம் ஒதுக்கப்படும்.

> வேலையில்லாபட்டதாரி இளைஞர்களுக்கு மாத உதவித் தொகை வழங்கப்படும். > பள்ளிகளில் போதைப்பொருள் தொடர்பாக புகார் அளிக்க 1058 என்ற கட்டணமில்லா எண் அறிமுகம் செய்யப்படும்.

## மின்சார வாகனங்களுக்காக 5 ஆண்டுகளில் 20,000 சார்ஜிங் நிலையங்கள்



சென்னை: 'மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20 ஆயிரம் பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும்' என தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026– 27) பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். அதில், எரி சக்தி துறையில் வெளியான முக்கிய அறிவிப்புகள்:

> தமிழ்நாட்டிற்கு 2640 மெகா கூடுதல் மின் உற்பத்தி திறனை வழங்கும் உடன்குடி நிலை-1 மற்றும் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல்திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்படும்.

> 550 கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டத்தின் செயல்பாடு விரைவுபடுத்தப்படும்.

> புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்கப்படுத்த பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சார திட்டத்துடன் இணைந்து 'புதிய வீட்டுக்கூறை சூரிய மின் மானிய திட்டம்' அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த 50 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

> சென்னை மாநகரில் உள்ள அனைத்து நுகர்வோர்களுக்கும், மாநிலத்தின் பிறபகுதியில் உள்ள 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோர்களுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

> கோயம்புத்தூர் – அரியலூர் 765 கேவி மின் பகிர்மான பாதை திட்டம் 4000 கோடி ரூபாய் செலவில் அரசு தனியார் கூட்டமை முறையில் செயல்படுத்தப்படும்.

> தமிழ்நாட்டின் தென் மண்டலத்திலிருந்து பசுமை எரிசக்தியை கொண்டு செல்லும் பசுமை எரி சக்தி வழித்தடத்தின் இரண்டாம் கட்டம் 1187 கோடி ரூபாய் மதிப்பிலும், 1640 கோடி ரூபாய் மதிப்பிலான விருதுநகர் – கோயம்புத்தூர் 765 கே.வி மின் பகிர்மான திட்டங்களின் செயல்பாடு விரைவு படுத்தப்படும்.

> மின்விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் 1,543 கோடி ரூபாய் முதலீட்டில் 128 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கும் பணியை அரசு மேற்கொள்ளும்.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



# "தவெக அரசின் பட்ஜெட்டுக்கு பூஜ்ஜியம் மார்க்" எடப்பாடி பழனிசாமி பேட்டி





சென்னை: "தவெக அரசு தாக்கல் செய்துள்ள முதல் பட்ஜெட், மக்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவில்லை. பழைய திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி பெயர் மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக சாடியுள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம்கூறும்போது, "தவெக அரசு முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளது. மக்கள் எதிர்பார்ப்பை இந்த அரசு பூர்த்தி செய்யவில்லை. மாற்றம் கொடுப்போம் என்று சொல்லி ஏற்கெனவே இருக்கும் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள்.

வசனத்தைப் பேசியே காலத்தை ஓட்டுகிறார்கள். ரீல்ஸ், ரீல் விடுவதுதான் இந்த ஆட்சியின் சாதனையாக பார்க்கப்படுகிறது.

திமுக ஆட்சியைப் போல தவெக ஆட்சியிலும் புதிய குழுவை அமைத்து பெயர் வைத்துள்ளனர். எப்படி நிதி ஆதாரத்தை பெருக்க முடியும், அதற்கான வழிமுறைகளைக் கூட தெரிவிக்கவில்லை. ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் கடன் இருக்கிறது; அந்தக் கடனை அடைக்க என்ன வழி என சொல்லவில்லை. முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற வாக்குறுதி ஏமாற்று வேலைதான். முழு பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிப்பு என்ன ஆனது?

இதுவரை தவெக ஆட்சியில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. பட்ஜெட்டில் எந்த ஒரு திட்டமும் முழுமையாக இடம்பெறவில்லை.

தேர்தல் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 10 லட்சத்து 98 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உள்ளது. திமுக அரசு கடனை வாங்கி எப்படி செலவு செய்தார்களோ, அதையே தவெக அரசு பின்பற்றுகிறது. பல்வேறு திட்டங்கள் தற்போது பெயர் மாற்றம் செய்து செயல்படுத்துகிறது.

கடன் வாங்கித்தான் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்ற நிலை உள்ளது. கடனை அடைக்காமல், புதிய திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு எப்படி சாத்தியம்?

வருவாயே இல்லாத காலகட்டத்தில் கரோனா நேரத்தில் சிறப்பான ஆட்சி அதிமுக செய்தது. கரோனா காலத்தில் மருத்துவ கட்டமைப்புகள் பலப்படுத்தப்பட்டது. பேரிடர்களை துணிச்சலாக எதிர்கொண்டது அதிமுக அரசு.

லீக்கேஜ்என்றுசொல்லித்தான் மக்களை ஏமாற்ற முடியும். முதலில் எந்தெந்த இடங்களில் லீக்கேஜ் உள்ளது என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ஆண்டாண்டு காலமாக இருக்கும் அதிகாரிகளுக்கு எங்கெங்கு லீக்கேஜ் உள்ளது என்பது தெரியாதா?

ஏதோ ஒரு காலச் சூழலில் வெற்றி பெற்றுவிட்டதால் 'வெற்றி, வெற்றி' என அனைத்து திட்டத்துக்கு பெயர் வைத்துள்ளார்கள். இந்த பட்ஜெட்டுக்கு பிறகு மக்கள் ஏன் வாக்களித்தோம் என சிந்திப்பார்கள். தவெக அரசின் பட்ஜெட்டுக்கு பூஜ்ஜியம் மார்க்தான் தர வேண்டும். இதில் என்ன உள்ளது?" என்றார் எடப்பாடி பழனிசாமி.

# 'தாய் கேர்' மையங்கள்: தமிழக பட்ஜெட் 2026ல் மருத்துவத் துறை அறிவிப்புகள் என்னென்ன?

சென்னை:தமிழகஅரசின் பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்த நிலையில்,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.23,357 கோடி



நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம், முதியோர்களுக்கான நடமாடும் சிகிச்சை மையங்கள் மற்றும் 'தாய் கேர்' மையங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026 –27) பொது பட்ஜெட்டைதமிழகநிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். அவர் தனது பட்ஜெட் உரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்ந்து பேசியது:

தாய் மற்றும் குழந்தை நல பராமரிப்பு,தமிழகத்தின் பொது சுகாதார அமைப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது. சமீபத்திய தேசிய மாதிரி பதிவுஅமைப்பின்கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் குழந்தை இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புகளுக்கு 11 ஆக உள்ளது. இது தேசிய அளவில் மிகக் குறைந்த விகிதங்களில் ஒன்றாகும்.

அரசுதொடர்ந்துபொது சுகாதாரத் துறையில் செயல்படுத்திய திட்டங்களால் மட்டுமே இது சாத்தியமானது. இதற்குச் சான்றாக, மாநிலத்தில் 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இவற்றில் 53 சதவீதத்துக்கும் மருத்துவமனைகளில் மேற்பட்ட பிரசவங்கள் அரசு நடைபெறுகின்றன.

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரித்து. இதன் மூலம் மருத்துவத் தேவைகளுக்காக பொதுமக்கள் சொந்தமாகச் செலவிடும் தொகையைக்குறைக்கும் நோக்கில்,அரசு தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், தாய்மையின் இன்பத்தையும் முக்கியத்துவத்தையும் போற்றும் வகையிலும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் இத்திட்டத்தை வழங்கப்படும். நடைமுறைப்படுத்துவதற்காக

நிதிதிருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> மூத்த குடிமக்களுக்காகதமிழகம் முழுவதும் 1,000 நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் படிப்படியாகத் தொடங்கப்படும். ஒவ்வொரு நடமாடும்சிகிச்சைமையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு இயன்முறை மருத்துவர் பணியில் இருப்பர். தமிழகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் இவர்கள் நேரில் சென்று இலவச உடல் பரிசோதனை செய்வர். நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாநிலம் முழுவதும் 'தாய்கேர்' என்றபெயரில் கருவுற்ற பெண்களுக்கான சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும்.

இந்த மையங்களில் கருவுற்ற பெண்கள் அவர்களுடைய மகப்பேறு நாள் நெருங்கும் வேளையில் தங்கியிருந்து பயன் பெறலாம். இந்த மையங்களில்,கருவுற்ற பெண்களுக்குக் கட்டணமில்லாமல் உணவு மற்றும் மருத்துவ உதவிகள்,தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்துக்காக 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> தொலைதூரமற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குச் சிறப்பு மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில்,அரசு 'மையம் கிளை' (Hub and Spoke) மருத்துவமனைகள் வகையிலான தொலைமருத்துவப்பராமரிப்பு அமைப்பு உருவாக்கப்படும்.

நிபுணத்துவ மருத்துவர்களைக் கொண்ட 5 மையங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை அளவிலான 200 கிளைகள் வலைதளம் மூலம் தொடர்புபடுத்தப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில், இம்மையங்கள் மற்றும் கிளைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 1,000 மையங்கள் ஏற்படுத்தப்படும். தொலை மருத்துவ வலையமைப்பை உருவாக்குவதற்காக, திருத்த வரவு--செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

புற்றுநோய் பராமரிப்பு தொடர்பாக இந்த அரசு மையம் கிளை' (Hub and Spoke) மருத்துவமனை வகையிலான அமைப்புகளை உருவாக்கும். புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனை, மாநில முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும், உயர் சிகிச்சை மருத்துவமனையாகவும் மாற்றப்படும். நோயாளிகளின் முதல் தொடர்பு மையமாக, ஐந்து மண்டல புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனைகள் நிறுவப்படும்.

இந்நிறுவனங்கள் புற்றுநோய் பராமரிப்பு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும். இதற்கான விரிவானதிட்டஅறிக்கை தயாரிப்பதற்காக, திருத்த வரவு- செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தொற்றாநோய்கள் மற்றும் புற்றுநோயாளிகளின் தொடர் சிகிச்சைக்கு அத்தியாவசிய மருந்துகள் தடையின்றிக் கிடைப்பதைஉறுதிசெய்வது மிகவும் அவசியமாகும். பரிசோதனைகள் மற்றும் ஆரம்பகால நோய் கண்டறிதல் அதிகரித்துள்ளதால், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பரிசோதனைகள் மற்றும் ஆரம்பகால நோய் கண்டறிதல் அதிகரித்துள்ளதால், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் புற்றுநோய்க்கு தொடர் சிகிச்சைபெறும்நோயாளிகளின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.



★★கடம்பத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி பதினோராம் வகுப்பு மாற்று திறன் மாணவன் கெவின் பள்ளி அளவில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டியில் கலந்துக் கொண்டு மண்பாண்டத்தில் அழகான டிசைன் வரைந்து வண்ணம் தீட்டி அசத்திய மாணவனை பள்ளியில் ஓவிய ஆசிரியரும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவருமான சா.அருணன் மாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்

# 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டம்



'ஊரகப் பகுதிகளில் பெண்களுக்காக 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும்' தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026–27) பொது பட்ஜெட்டை தமிழக நிதிய மைச்சர் மரிய வில்சன் தாக் கல் செய்தார். அவர் தனது பட்ஜெட் உரையில், 'கூட்டுறவு சங்கங்களி ல் பயிர் கடன் பெற்ற 14.43 லட்சம் விவசா யிகளுக்கு ரூ. 5 ,932 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

> கூட்டுறவுத் துறைக்கு 8,028 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> தமிழகத்தில் நெல் உற்பத்தி குறையாமல் இருக்க 134 கோடி ஒதுக்கீட்டில் குறுவை தொகுப்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

> விவசாயிகளுக்கு வழங்கும் மின் மானியத்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண் மற்றும் உழவர் நலத்துறைக்கு 14,984 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு துறையில் வெளியான அறிவிப்புகள்:

> ஊரகப்பகுதிகளில் பெண்களுக்காக 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள்வழங்கப்படும்.30,000பெண்கள்பயனடையும் இத்திட்டத்திற்காக ரூ.110 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> கால்நடை மருத்துவமனைகளுக்கு தேவையான 41 கட்டடங்கள் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

# மீனவர்களுக்கான உதவித் தொகை ரூ.7,000 ஆக உயர்வு: தமிழக பட்ஜெட் 2026ல் அறிவிப்பு



சென்னை: மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.6,000–ல் இருந்து ரூ.7,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம், 193 லட்சம் பாரம்பரிய மீனவர் குடும்பங்கள் பயனடையும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 135 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026–27) பொது பட்ஜெட்டை சட்டப்பேரவையில் இன்று நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். அதில், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை, பால்வள துறை தொடர்பாக வெளியான அறிவிப்புகள் விவரம்:

> பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கி வரும் மீ ன்பிடிப் பணியில்லாக் கால உதவித்தொகை ரூ.6,000–லிருந்து ரூ.7,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இ தன் மூலம், 193 லட்சம் பாரம்பரிய மீனவர் குடும்பங்கள் பயனடையும். இதற்காக ரூ.135 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> நவீன பதப்படுத்தும் வசதிகள் கொண்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வாங்கும் மீனவர்களுக்கு வட்டி மானியம் வடிவிலான நிதியுதவி வழங்க ரூ.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

10,000 பெண்களுக்கு இலவச கறவை மாடுகள்

> பால் உற்பத்தியை அதிகரிக்கவும், ஊரகப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் ஆண்டுதோறும் 10,000 தகுதி வாய்ந்த பெண்களுக்கு இலவசக் கறவை மாடுகள் வழங்கப்படும். இதற்காக ரூ.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு மொத்தமாக ரூ.4,880 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



# வெற்றி வீடு திட்டம்: தமிழக பட்ஜெட் 2026ல் அறிவிப்பு

சென்னை: கிராமப்புறங்களில் குடிசை வீடுகளில் வசிக்கும் ஏழைகளுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் நோக்கில் வெற்றி வீடு திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாகவும், இத்திட்டத்தின் கீழ் முதல் ஆண்டிலேயே 70,000 வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி ஒதுக்கப்படுவதாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்கான அலகுத் தொகை குறைவாக நிர்ணயிக்கப்படுவதால், உண்மையில் மிகவும் தகுதிவாய்ந்த ஏழைக் குடும்பங்கள் வீடு வழங்கும் திட்டங்களிலிருந்து விலக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் செலவை ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்ட குடும்பங்கள்தான் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற முடியும்.

இதனைத் தவிர்க்கும் வகையில், இப்புதிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், கூரை வீடுகளில் வசிப்பவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக வீடு ஒன்றிற்கான அலகுத் தொகையை 3.10 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

# Rahul Gandhi to address media amid uproar over CJP crackdown, ram temple donation row

Leader of Opposition in the Lok Sabha and Congress MP Rahul Gandhi will address the media on Wednesday outside 10 Janpath in New Delhi, HT has learnt. His remarks come amid continued disruptions in Parliament, with both the Lok Sabha and Rajya Sabha witnessing repeated adjournments over Opposition protests. The Lok Sabha was adjourned for the day.

In the Rajya Sabha, Law Minister Arjun Ram Meghwal is expected to move the Supreme Court (Judges) Amendment Bill, 2026 for consideration and passage. The bill, which seeks to increase the sanctioned strength of Supreme Court judges to 38, has already been passed by the Lok Sabha.



The Opposition has been demanding answers from Union Home Minister Amit Shah over the police action during the Cockroach Janta Party's 'Chalo Sansad' march on July 20. Opposition MPs have also repeatedly questioned the absence of Prime Minister Narendra Modi and Shah from the House proceedings.

Along with seeking a discussion on the police action against the protesters, the Opposition has also been pressing for a debate on the alleged theft of donations meant for the Ayodhya Ram Temple. Parliament monsoon session LIVE: The Rajya Sabha on Wednesday passed the Supreme Court (Number of Judges) Amendment Bill, 2026.

Parliament monsoon session LIVE: Leader of Opposition in the Lok Sabha and Congress MP Rahul Gandhi will address the media at 5 pm on Wednesday outside 10 Janpath in New Delhi, party sources said. (With inputs from Saubhadra Chatterji)

Parliamentary Affairs Minister Kiren Rijiju on Wednesday accused the Congress, CPI and Samajwadi Party of taking an "anti-Lord Ram" stand, alleging that they had opposed the existence of Lord Ram and protested the construction of the Ram Mandir. Speaking in the Lok Sabha, Rijiju claimed the Opposition had worn black bands when the temple was being built and demanded that the three parties apologise to the country and for "insulting Lord Ram" Government sources told PTI that home minister Amit Shah is expected to speak in Parliament when the Foreign Contribution (Regulation) Amendment Bill, 2026 comes up for discussion and passage, amid Opposition criticism over his absence from the House.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.